# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 61/2005

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Parangi | Father/Husband Name:Muthan | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 25.01.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் மேலவளவு காலனியில் வசிக்கிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.4-ஐ தெரியும். எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும், அவரது பெயர் தெரியாது. சம்பவம்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்தின்போது நான் சுமார் 10 வயது சிறுவனாக இருந்தேன், தற்போது எனக்கு வயது 32 ஆகிறது. போலீசார் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது.

(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க அரசுதரப்பில் கேட்டுக்கொண்டதால் அனுமதிக்கப்படுகிறது.)

குறுக்கு விசாரணை: அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 30.06.96ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை சுமார் 04.30 மணியளவில் எங்கள் ஊரைச்சேர்ந்த சுப்பிரமணியன் என்பவர் சாப்பாட்டு கேரியரை தூக்கிக்கொண்டு ஊத்தங்காடு கருப்புசாமி கோயிலுக்கு வடமேற்கே போய்க்கொண்டிருந்தார். நான் அவருக்கு தெரியாமல் அவர் சென்ற பாதையிலுள்ள வேளமரத்தடிக்கு அருகாமையில் சென்று மறைந்து பார்த்தபோது மேலவளவு கொலை வழக்கில் தேடப்பட்டு வரும் மனோகரன், அழகு, புகழேந்தி, வடிவேல், பூமார்க் என்ற சுப்பையா ஆகியோர்கள் சுப்பிரமணியன் கொண்டுசென்ற சாப்பாட்டு கேரியரை பிரித்து எல்லோரும் சாப்பிட்டு பேசிக்கொண்டிருந்தார்கள், அவர்கள் சாப்பிட்டதும், சுப்பிரமணி கேரியரை எடுத்துக்கொண்டு வடிவேல் மற்றும் பூமார்க் என்ற சுப்பையா ஆகியோரோடு ஊருக்கு திரும்ப புறப்பட்டார்கள் . நான் அவர்களுக்கு தெரியாமல் ஊருக்கு திரும்பிவிட்டேன், வெளியே சொன்னால் என் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று தெறிந்து யரிடமும் சொல்லவில்லை

என்று போலீசாரிடம் சொன்னதாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் தங்கள் ஊர்க்காரர்கள் என்பதால் எதிரிகளை காப்பாற்றவேண்டி உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.